[1972 டிசம்பர் 6

Treatment for Cholera at Kancheepuram.

*46 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state —

(*a*) whether Kancheepuram was infested with cholera in June 1972 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) 727 பேர் நோயால் பாதிக்கப்பட்டார்கள் ; அவர்களில் 32 பேர் காலரா நோயால் இறந்தனர்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, இந்த காலரா நோயால் தற்போது சுகாதார நடவடிக்கைகளினுல் பெரும்பாலும் கட்டுப்பட்டிருக் கிறது. இருப்பினும் ஒரு சிலர் காலரா நோய் ஆண்டவனின் கோபத்தினுல் ஏற்படுகிறது என்று இன்னும் சொல்லிக்கொண்டிருக்கிருர்களே. அதனுல் இந்த நோய் ஆண்டவனின் கோபத்தால் ஏற்படுகிறதா அல்லது சுகாதார கேடுகளினுல் ஏற்படுகிறதா என்ற விபரத்தை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சுற்றுப்புறச் சூழல் களில் ஏற்படுகின்ற சுகாதார கேடுதான் நோய்களுக்குக் காரணமே தவிர ஆண்டவனின் கோபம் என்று சொல்வதற்கில்லை. மக்கள் சுகாதார முறையில் தண்ணீரை கொதிக்கவைத்து அருந்தியும், பண்டங்களை சரியான முறையில் வேகவைத்து ஆறியவுடன் சாப்பிட்டும் வந்தால் நோய்களிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் ; நோய் வராது.

திரு. சி. வி. எம். அண்ணுமலை : தலைவரவர்களே, காஞ்சிபுரத்தில் பெரும் பாலும் கைத்தறி நெசவாளர்களே இருக்கிருர்கள். அவர்கள் பொரு ளாதார நெருக்கடி காரணமாக தரம் குறைந்த காய்கறிகளை—அதிலும் அழுகல் காய்கறிகளை வாங்கி சாப்பிடுகிருர்கள். அதனுல் காலரா— நோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. ஆகையால் அங்குள்ள மக்களின் பொருளாதார வளத்தை பெருக்குவதற்கு ஏற்ற வகையில் ஏதாவது புதிய தொழிற்சாலைகளை அங்கு நிறுவி, நெசவாளர்களுக்கு மாற்றுவேலை கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கு நான் நேரடியாகப் பதில் சொல்ல இயலாது. ஆனுல் அழுகல் காய் கறியினுல் காலரா நோய் ஏற்படுகிறது என்று சொல்வது உண்மையல்ல. அதனுல் வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் ஏற்படலாம். அதைப் பார்த்து மக்கள் காலராவாக இருக்கலாம் என்று பயப்படுகிருர்கள்.

அந்த வகையில்தான் காஞ்சிபுரத்தில் ஏற்பட்ட நோயும். காலராவாக இருக்கலாம் என்று எண்ணி, அவர்களுக்கு தடுப்பு நடவடிக்கையாக காலரா நோய்க்குள்ள மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 727 பேர்கள். அனைவருக்கும் காலரா நோய் ஏற்படவில்லை.

Blood Bank for Otteri.

*47 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether it is a fact that a full-fledged blood bank has been opened in the T. B. Hospital, Otteri, Madras ; and

(*b*) if so, the details thereof ;

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இரத்தம் செலுத்தும் முறையிலும் புத்துயிர் கொடுக்கும் முறையிலும் பயிற்சி பெற்ற ஒரு மருத்துவ அதிகாரியின் பொறுப்பிலும் மற்றும் சார்ந்துள்ள அலுவலர்களுடனும் ஒரு குருதி சேமிப்பு நிலையம் ஓட்டேரியிலுள்ள காசநோய் மருத்துவ மனையில் 4—9—1971 முதல் இயங்கி வருகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, ஓட்டேரி காசநோய் மருத்துவ மனையில் குருதி சேமிப்பு நிலையம் அமைக்கப்பட்டிருப்பதைப் போன்று தமிழகத்திலுள்ள மற்ற சில வட்டாரங்களிலும் கூட குருதி சேமிப்பு நிலையங்களை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, குருதி சேமிப்பு நிலையங்களை அமைக்கும் ஏற்பாட்டினை வசதியான இடங்களில் படிப்படியாக விஸ்தரிக்க வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை. குருதி சேமிப்பு நிலையத்தை அமைத்த பின் அங்கே இரத்தம் கொடுப்பதற்கு ஆள் இல்லாமல் போனால் அதனால் பயனில்லை. எனவே இரத்தம் கொடுக்க முன்வருபவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, வசதியான இடங்களில் புதிதாக குருதி சேமிப்பு நிலையங்களை அமைக்க அரசு தக்க நடவடிக்கையினை எடுக்கும்.

DR. H. V. HANDE : While it is a welcome thing that a Blood Bank has been opened in the Otteri Hospital, since this hospital is in the heart of the City of Madras unlike the Tambaram Sanatorium and because of that many patients prefer this Hospital to avoid transport difficulties, etc., will it be possible for the Government to think seriously about upgrading this hospital and making it a pucca institution so that the blood bank could be utilised properly and serve more people more effectively ?